# பார்ப்பனச் சூழ்ச்சியா?

நாமக்கல் கவிஞர்

தமிழ்ப்பண்ணை

# பார்ப்பனச் சூழ்ச்சியா?

நாமக்கல் கவிஞர்
*ராமலிங்கம் பிள்ளை*

தமிழ்ப்பண்ணை
தியாகராய நகர் — சென்னை

முதற் பதிப்பு: ஆகஸ்ட் 1948

விலை அணா நான்கு

விநோதன் அச்சகம், சென்னை.

# பார்ப்பனச் சூழ்ச்சியா?

தேசபக்தர்களே! நமது தமிழ் நாட்டில் பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற மனஸ்தாபம் நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருகின்றது. அது பாமர மக்களுக்கு ஒரு தப்பான வழியைக் காட்டி, பண்டிதர்களையும் கலக்கி, பொதுஜன சேவையில் ஈடுபட்டிருக்கிற பிராமணர்களையும் பிராமணரல்லாதாரையும் மிகவும் வருத்தப்படுத்தி வருகின்றது. இந்தக் கலக்கத்தைத் தெளியவைத்தால்தான் தமிழ் நாட்டில் எந்த விதமான பொதுஜன ஊழியமும் சரிவர நடக்கும். என்னை ஒரு பிராமணரல்லாதவன் என்பார்கள். அந்த முறையில் நான் அதைப் பற்றிப் பேசவேண்டிய அவசியமும் பொறுப்பும் எனக்கு இருப்பதை நீங்கள் ஆதரிப்பீர்களென்றே நம்புகிறேன்.

இந்தப் பிராமண–பிராமணரல்லாத சச்சரவிற்கு பிராமணர்களுடைய குற்றங் குறைகள் எவையானாலும் அவற்றைப்பற்றி அவர்களுக்கு எடுத்துப் பேச பிராமணர்களுக்குள்ளேயே பலபேர் இருக்கின்றார்கள். அந்த வேலையை அவர்களுக்கே விட்டுவிட்டு, பிராமணரல்லாதார் கவனிக்கவேண்டிய விஷயங்களை மட்டும் நான் பேசுகின்றேன். அவற்றை வெகு நிதானமாக நிறுத்துப் பார்க்கும்படி பிராமணரல்லாத ஒவ்வொருவரையும் நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். பிராமணரல்லாத இயக்கத்தையாவது அதன் தலைவர்களையாவது அவமதிக்க வேண்டுமென்பது என் ஆசையல்ல. பிராமணர்களைப் போலவே மற்ற எல்லா மக்களும் சகல விதங்களிலும் முன்னேற்றமும் செல்வாக்கும் அடைய வேண்டுமென்று சொல்லப்படுகின்ற அவர்களுடைய நோக்கத்தை நான் மிகவும் ஆதரிக்கின்றேன். அனேக விஷயங்களில் அவர்

களுக்குள்ள அபிப்பிராய பேதங்களையும் நான் மதிக்கின்றேன். ஆனால் அவர்கள் செய்து வரும் மிகவும் தவறான பிரசாரத்தில் என்னைப்போன்ற பிராமணரல்லாதார் பலருக்கு இருந்துவரும் அபிப்பிராய பேதத்தை இந்தத் தமிழ் நாட்டிலுள்ள எல்லா பிராமணரல்லாதாருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையென்றும், அதற்கு இதுவே தக்க தருணமென்றும் உணர்கின்றேன். என்னோடு மாறுபட்டவர்களையும் நான் வேண்டிக்கொள்வது ஒன்றே ஒன்று. அது என்னவெனில் நான் சொல்லுவதை மனக் கொதிப்பின்றி மதிப்பிட வேண்டும் என்பதே.

பிராமணர்கள் எல்லாரும் சூழ்ச்சிக்காரர்களென்றும், சூதுக்காரர்களென்றும், பிற ஜாதியாரைக் கெடுத்தே ஜீவனம் செய்யும் பித்தலாட்டக் காரர்களென்றும் செய்யப்படும் ஒரு பிரசாரத்தை என்னவென்று சொல்வது! இந்தப் பிரசாரத்துக்கென்று நடத்தப்பட்டு வரும் தமிழ் பத்திரிகைகளும், அவற்றை ஆதரிக்கும் தலைவர்களும் பிரயோகப்படுத்துகின்ற மிகக் கொச்சையான வார்த்தைகளை நினைக்கவும் கூட என் மனம் கூசுகின்றது. அப்படி ஒரு சமூகத்தை ஏகோபித்து அவமதிப்பது அன்பல்ல; அழகல்ல; ஆண்மையும் ஆகாது. பிராமணரல்லாத தமிழர்களின் பேரால் இப்படி ஒரு சமூகத்தை ஒருங்கே இழிவுபடுத்திப் பேசுவதைக் கேட்கும்போதெல்லாம் பிராமணரல்லாத என் மனம் நாணுகின்றது; தலை குனிகின்றது; பகுத்தறிவு பதைக்கின்றது; சுயமரியாதை சுருங்குகின்றது; நீதி நிந்திக்கின்றது; நேர்மை சிந்திக்கின்றது. தமிழ் எழுத்துக்களில் அந்தக் கொச்சைப் பதங்களும் எண்ணங்களும் அச்சிட்டிருப்பதைப் பார்க்கும் போதெல்லாம் என்னுடைய தாய்மொழி இவ்வளவு அசுத்தப்படுத்தப்பட்டு வருகின்றதே யென்று என் மனம் தவிக்கின்றது.

தமிழ் நாட்டின் பெருமையையும் தமிழ் மொழியின் அருமையையும் காக்கக் கடமைப்பட்ட தமிழர்கள் இந்த மிலேச்சப் பிரசாரத்தைத் தடுக்க வேண்டும். தன்னைச் சொன்னால் கோபத்தையும் கொதிப்பையும் உண்டாக்கக் கூடிய வார்த்தைகளை தான் பிறர்மேல் சொல்லுகின்றதைத் தமிழர்கள் தள்ளிவைக்க வேண்டும். பிராமணர்கள் இதைப்பற்றி வருத்தப்பட்டாலும் படாவிட்டாலும், பிராமண ரல்லாதாருக்கே இந்த பிரசாரம் பெரும் பிழை புரிவதாகும். சரித்திரம் அறிந்தநாள் முதற்கொண்டு, பல்லாயிரம் வருஷங்களாக எல்லா வகுப்பினரும் இத் தமிழ் நாட்டில் மருவிக்கலந்து வாழ்ந்து வந்திருப்பதைத் தமிழர்களுடைய சரித்திரமும் இலக்கியங்களும் நன்றாகக் காட்டும். கல்வி சிறந்த இத் தமிழ்நாட்டின் கலைகளிலும் இலக்கியங்களிலும் பிரித்துப் பேச முடியாதபடி பின்னிக் கிடக்கும் பிராமண சமூகத்தை ஏகோபித்து இழிவு சொல்வது தமிழர்களுடைய நாகரிகம் தற்கொலை செய்து கொள்ள முயல்வது போலிருக்கின்றது. தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல இந்திய தேசம் முழுதுக்கும் பெருமை கொடுத்தவர்கள் பலர் பிறந்த ஒரு சமூகத்தைச் சிறுமை பேசுவது தருமம் அல்ல.

சங்கரர், இராமானுஜர், மத்வர் இவர்களைப் பெற்றெடுத்து உலகத்துக்கெல்லாம் உதவிய குலம் பார்ப்பன குலம் அல்லவா ? ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தயாநந்த சரஸ்வதி, ரமண மகரிஷி, இவர்களைத் தந்த ஜாதியை இழித்துரைப்பதால் எவருக்கு என்ன லாபம் ? ஸ்ரீ ரானடே, கோகலே, சுரேந்திரநாத் பனர்ஜி, முத்துசாமி ஐயர், வீரராகவாச்சார், G. சுப்ரமண்ய ஐயர், S. சுப்ரமண்ய ஐயர், அனந்தாச்சார்லு:, ரகுநாத ராவ், மாதவ ராவ், வ. வே. சு. ஐயர், சுப்ரமண்ய பாரதி இவர்களையெல்லாம் ஈன்றெடுத்தது பார்ப்பன குலம் அல்லவா ?

இற்றைக்கு நூறு வருஷங்களுக்கு முன்னாலேயே ஹிந்து மதத்தில் அர்த்தமில்லாமல் கலந்துவிட்ட பல கொடிய பழக்கங்களை யெல்லாம் வெகு பலமாகக் கண்டித்தவரும், அதற்காகத் தந்தையால் வெறுக்கப்பட்டு வீட்டை விட்டு ஓட்டப்பட்டவரும், பிறகு தாமாகத் தேடிக்கொண்ட செல்வாக்கினால் ஹிந்துப் பெண்களுடைய சம உரிமைகளுக்காக ஓயாது உழைத்தவரும், உடன் கட்டை ஏறும் ஒவ்வாத வழக்கத்தை அடியோடு ஒழித்தவரும், தீண்டாமை என்கிற அநியாய வழக்கத்தை அழிக்க வேண்டுமென்று முதல் முதல் இந்த நாட்டில் கிளர்ச்சி செய்தவரும், பிராமண ஜாதியிலே பிறந்த ராஜாராம் மோகன்ராய் அல்லவா ?

சுமார் 50 வருஷங்களுக்கு முன்னால், தாம் திருவனந்தபுரத்தில் திவானாக இருந்தபோது. சோம்பேறிப் பார்ப்பனர்களுக்குச் சோறு போடுவது தகாத காரியம் என்று அந்தத் திருவாங்கூர் சமஸ்தானத்தில் வெகு நாளாக இருந்துவந்த 'ஊட்டுப்பெறை'களுக் கெல்லாம் பூட்டுப் போட்ட சர். A. சேஷைய சாஸ்திரியார் பெரிய "மடிசஞ்சிப்" பார்ப்பனக் குடும்பத்தில் வந்தவரல்லவா ?

தெருவில் விழுந்துவிட்ட தீண்டாதானை ஓடியெடுத்து மடிமீதிருத்தி மயக்கம் தெளிவித்தவரும், முதன் முதல் "ப்ளேக் நோய்" இந்தியாவுக்கு வந்துவிட்டபோது பம்பாய் மாகாண மெங்கும் தீண்டப்படாதவர்கள் குடிசைகளுக்குள் வலியச்சென்று வைத்திய உதவிகளைச் செய்து தொண்டர் படைக்குத் தலைவராயுழைத்தவரும், கள்ளைக் குடிக்காத மற்ற ஜாதியாருக்கெல்லாம் ஒரு தலைவரியைப் போட்டாவது வருமானத்துக்கு வழி செய்து கொண்டு கள்ளுக்கடைகளை யெல்லாம் மூடி ஏழைக் குடும்பங்களைக் காக்கவேண்டுமென்று பலநாள் இந்த அரசாங்கத்தோடு வாதாடியவருமான ஸ்ரீ பாலகங்காதர

திலகர் பெருமான் மிகவும் வைதிக வம்சத்தில் வந்த பார்ப்பனரே யல்லவா? இந்திய நாட்டின் சுதந்திரத்திற் காகக் காந்தியடிகளுக்குக் கைபோல் உதவினவரும், கோடிக்கணக்கான தமது செல்வத்தை யெல்லாம் காங் கிரஸ் காரியங்களுக்கே கொட்டிக்கொடுத்தவரும், மிஞ்சி யிருந்த தம்முடைய மாளிகையையும் அதற்கு உரிமைக் காரரான தமது ஒரே மகன் ஜவஹர்லால் நேருவின் கையிலேயே—அவர் முன்னொரு முறை காங்கிரஸ் தலைவராக இருந்தபோது—தேசத்துக்குப் பொது உடைமை யாக தானம் செய்தவருமான பண்டித மோதிலால் நேருவும் பார்ப்பனரே யல்லவா? அவருடைய மகன் ஜவஹர்லாலைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

உலக சரித்திரத்தில் உயர்ந்த வீரர்களுக்குள் வீரராக விளங்கும் சிவாஜி மன்னனுக்கு ஸ்ரீ பவானி தேவதை நேரே நின்று பேசினாள் என்கிற பக்தியையும் பராசக்தியின் வீரத்தையும் ஊட்டி வளர்க்க உதவின சிவாஜியின் வளர்ப்புத் தந்தையான தாதாஜிகான் தேவும் ஒரு பார்ப்பனர் அல்லவா?

சரித்திரம் ஒருபுறம் இருக்கட்டும், சமய நம்பிக்கை களைப் பார்ப்போம். தமிழ்நாட்டுப் பார்ப்பனரல்லாதவர் களில் பெரும்பகுதியினர் சைவர்கள். இச்சைவர்களுக்குத் தெய்வத்தின் தரிசனமாக இருப்பது தேவாரமும் திருவாசகமுமே. இந்தத் தேவாரம் திருவாசகத்தைப் பாடினவர்கள் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தர மூர்த்தி, மாணிக்கவாசகர் என்ற நால்வர். இவர்களைத்தான் சைவர்கள் சமய குரவர்களென்று தொழுவார்கள். இந்த நாலு பேரில் திருநாவுக்கரசர் ஒருவரைத் தவிர மற்ற மூன்று பேரும் பார்ப்பனர்கள். இந்தச் சமய குரவர்கள் நால்வர் போகச், சைவர்களெல்லாம் சந்தான குரவர்க ளென்று வணங்குகின்றவர்கள் மெய்கண்ட தேவர்,

அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் என்ற நால்வர். இவர்கள்தான் தமிழ் நாட்டில் சிவஞானத்தை போதித்தவர்கள். இவர்களைச் சைவர்கள் தெய்வமெனப் போற்றுவார்கள். இந்த சந்தான குரவர்கள் நால்வரில் அருணந்தி சிவாச்சாரியாரும் உமாபதிசிவமும் பார்ப்பனர்கள். அன்பர்களே, பார்ப்பனர்கள் எல்லாரும் பரம்பரையாகப் பதிதர்கள் என்று சொல்லும்போது இந்த சமய குரவர்கள் மூவரையும் சந்தான குரவர்கள் இருவரையும் சேர்த்தே அவமதிப்பதாகாதோ ? அது சைவர்களைப் புண்படுத்தவில்லையா ?

வைஷ்ணவர்களிலும் ஆழ்வார்களில் சிலர் பார்ப்பனர்கள். மேலும், வெகு வைதிக வைஷ்ணவப் பார்ப்பனர்களெல்லாம் விழுந்து விழுந்து வணங்க வேண்டியபடி அளவற்ற உயர்வுதரப் பெற்றிருக்கிற ஸ்ரீ நம்மாழ்வார் ஒரு வேளாளப் பார்ப்பனரல்லாதார். இந்த உண்மைக்கு முன்னால் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரை மதித்ததில்லை என்ற சொல் எப்படி நிற்கும் ?

எண்ணிறந்த பிராமணரல்லாத சங்கீத வித்வான்களுடைய பக்தியிலும், பாட்டிலும், பக்கமேளத்திலும் நாதரூபமாக இன்னும் விளங்கி வருகின்ற தியாகையர்வாளும் ஒரு பார்ப்பனரல்லவா ?

சரித்திரமும், மதமும், பக்தியும் ஒருபுறமிருக்கட்டும்; தமிழ் இலக்கியத்தையும் கொஞ்சம் பார்ப்போம். தமிழ் இலக்கியத்துக்குச் சிறப்புச் செய்திருக்கின்ற பார்ப்பனர் பலர். அவர்கள் எல்லாரையும் பற்றி இங்கே அளந்து கொண்டிருப்பது அசம்பாவிதமாகும். சுருக்கமாக இலக்கணச் சிறப்பு வாய்ந்த தமிழ் பாஷைக்கு மட்டுமல்லாமல் தமிழர்களுடைய சமூக வாழ்க்கைக்கும்கூட இலக்கணம் செய்த தோல்காப்பிய முனிவரும் ஒரு பார்ப்பனர். உலகத்

துக்கு ஒப்பற்ற ஒரு நூலாக எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட தெய்வத் திருக்குறளுக்கு உரைசெய்த பேராசிரியர் பரிமேலழகரும் ஒரு பார்ப்பனரே. நம்முடைய கண்ணுக்கு முன்னால் தமிழ்மொழிக்கு அருந்தொண்டு செய்திருக்கிற ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரும் ஒரு பார்ப்பனர். அவருடைய முயற்சிகள் இல்லாதிருந்தால், பல அரிய தமிழ் நூல்கள் இந்நேரம் இருந்த இடம் தெரியாமல் செல்லரித்துப் போயிருக்கும்.

பாருங்கள், இந்த நாட்டின் எல்லாத் துறைகளிலும் இப்படிப் பின்னவிட்டுக் கிடக்கின்ற பிராமணர்களை பிரித்துப் பேசி வருத்தப்படுத்துவது நல்லதா? நாகரிகமா? நாகரிகம் அறிந்தவர்கள் ஒருவருடைய குலத்தைப் பழித்துக் குற்றஞ்சாட்ட மாட்டார்கள்.

இந்த நாட்டில் இப்போது இருக்கின்ற பிராமணர்கள் எல்லாரும் கெட்டவர்கள் என்றே வைத்துக்கொண்டு அவர்கள் அனைவரையும் ஏககாலத்தில் அழித்துவிட முடிந்தாலும்கூட, இமயம் தொட்டுக் குமரி வரையிலும் இந்தப் பாரத நாட்டின் பெருமைகளுக் கெல்லாம் காரணமா யிருந்திருக்கிற 'பிராமணீயத்தை' எவரும் அழித்துவிட முடியாது. அழிக்க முயலவும் கூடாது. அன்னிய நாட்டாரெல்லாம் அவர்களுக்கு அலுப்பு வந்த போதெல்லாம் மன அமைதிக்காக ஆவலோடு திரும்பிப் பார்ப்பது இந்த இந்திய தேசத்தைத்தான். அவர்கள் தேடுகின்ற சாந்தி இங்கேதான் பிறந்தது. இங்கேதான் வளர்ந்தது. மறைவாகவேனும் இன்னும் இங்கேதான் இருந்து வருகின்றது.

## பார்ப்பனச் சூழ்ச்சி

இன்னொன்று. பிராமணர்களெல்லாம் சூழ்ச்சிக்காரர் களென்றும், பிராமணரல்லாத மற்ற ஜாதியாரெல்லாம் அந்த சூழ்ச்சியிலே சிக்கிக்கொண்டு திகைக்கின்றார்க

ளென்றும் ஓயாமல் சொல்லுகின்றார்கள். இந்தப் பேச்சு பிராமணரல்லாதாருடைய தன் மதிப்புக்கே தவறு செய்வதாகும். மேலும், தமிழ்நாட்டில் இப்போது இருந்து வரும் இலக்கியங்களும், பழக்க வழக்கங்களும் எல்லாம் முற்காலத்திய பிராமண ரல்லாதார்களை யெல்லாம் ஏமாற்றிச் செய்து வைத்திருக்கிற காரியங்களென்றும் சொல்லப்படுகின்றது. அப்படியானால் இந்த தமிழ் நாட்டை ஆண்டுவந்த, சேர, சோழ பாண்டியராதி மன்னர்களும், பாரி, சடையப்ப முதலியார் போன்ற வள்ளல் களும், அவர்களுடைய ஆதரவில் இன்றைக்கும் உலகத்தி லுள்ள அறிஞர்களெல்லாம் உச்சிமேல் வைத்து உவக்கத் தகுந்த இலக்கியங்களைத் தந்துபோன இளங்கோவடிகள், கம்பன், ஒட்டக்கூத்தன், புகழேந்தி, அவ்வை இவர்கள் முதலாக பிற்காலத்திய திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மாம்பழக்கவிராயர், சுப்ரமண்ய பாரதி ஈருகவுள்ள எண்ணிறந்த புலவர்களும், அவர்களைப்போற்றி வைத்தத் தமிழ்நாட்டுக் குடிமக்களும் சொந்த அறிவில்லாமல் பிராமண சூழ்ச்சியினால் ஏமாந்துபோன இழிவுடையவர் களேயாகி விடுகிறார்கள். அந்த நிலைமையை ஒப்புக் கொண்டால் பிராமணரல்லாதவர்களுக்கு அதைவிட அவமானம் வேறெதுவும் இருக்கமுடியாது. உண்மையான வீர வாழ்க்கை வாழ்ந்து உலகத்துக்கெல்லாம் நாகரிகம் இன்னதெனக் கற்பித்த நம்முடைய பிராமணரல்லாத முன்னோர்கள் சொந்த அறிவில்லாமல் இன்னொருவருடைய சூழ்ச்சியினால் ஏமாந்து போனவர்கள் என்பதை எந்தத் தமிழனும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஜாதி வேற்றுமையினாலும் மதவித்தியாசங்களினாலும் இந்த நாட்டில் இப்போது தீமையாக இருக்கின்ற ஏற்பாடுகளுக்கெல்லாம் பழைய காலத்துப் பிராமணன் எவ்வளவு பொறுப்பாளியோ அவ்வளவு பொறுப்பாளி

பிராமணரல்லாதாலும், முற்காலத்துப் பார்ப்பனர்களும் அல்லாதவரும் சேர்ந்து அந்தக் காலத்துக்கு நன்மையாக இருந்ததும், வெகுஜன சம்மதமானதுமாகச் செய்து வந்த பல பழக்க வழக்கங்கள் இந்தக் காலத்துக்கு மிகவும் கொடுமைகளாக இருக்கின்றன. இந்தக் கொடுமைகளையெல்லாம் அழிக்கவேண்டியது அவசியமே. ஆனால் பிராமணர்களும் பிராமணரல்லாதவரும் சேர்ந்து செய்துவிட்ட காரியங்களுக்கு பிராமணர்களைமட்டும் குற்றவாளிகளாக்குவது பெருங்குற்றம். நாம் நேரில் காணாததும் நிச்சயிக்க முடியாததுமான பழைய காலத்தை விட்டுவிட்டு நமது கண்ணுக்கு முன்னால் நடக்கும் இந்தக் காலத்தைப் பார்ப்போம். சூழ்ச்சி எங்கே இருக்கிறது? இந்தக் காலத்தில் ஒரு ஜாதி மற்றெல்லா ஜாதிகளையும் வெறும் சூழ்ச்சியினால் ஏமாற்றி அடக்கி ஆளமுடியுமா? பார்ப்பனர் சொன்னதையெல்லாம் மற்றவர்கள் கேட்ட காலம் கடந்துவிட்டது. அப்படியிருக்க பிராமணரல்லாதாருக்குக் கெடுதலான என்ன சூழ்ச்சியை பிராமணன் இப்போது செய்ய முடியும்? அப்படிச் செய்தாலும் அதில் சிக்கி ஏமாந்து போகக் கூடிய அறியாமை எழுத்துவாசனையில்லாத பிராமண ரல்லாதவனிடத்தில்கூட இப்போதில்லை.

பின், இந்த சூழ்ச்சி எங்கே இருக்கலாமென்றால், பிராமணரும் பிராமணரல்லாதாரும் வேறொரு மூன்றாவது மனிதருடைய தயவை நாடி, அவரைச் சந்தோஷப்படுத்தி ஜீவனம் செய்ய வேண்டிய இடங்களில், பிராமணரல்லாதாருடைய சூழ்ச்சியைக் காட்டிலும் பிராமணருடைய சூழ்ச்சி ஒருக்கால் வெல்லக் கூடியதாக இருக்கலாம். முக்கியமாக இந்த நாட்டில் இப்போது இருந்து வருகின்ற ஆட்சி முறையிலும் அதைத் தழுவி நிற்கின்ற ஸ்தாபனங்களிலும் மட்டுந்தான் இந்த சூழ்ச்சிகள் இருந்தால்

இருக்க முடியும். எத்தனை தரம் எப்படி எப்படியெல்லாம் திருப்பித் திருப்பி எண்ணிப் பார்த்தாலும், இந்த அரசாங்கத்தின் சம்பந்தமுள்ள இடங்களைத்தான் இந்த சூழ்ச்சிகள் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. இந்த நாட்டின் விவசாயத்திலோ, வியாபாரத்திலோ, கைத்தொழில் களிலோ எவரும் எந்த சூழ்ச்சியும் செய்ய இடமில்லை. இதுவரையிலும் ஆங்கிலப் படிப்பில் முந்திக்கொண்ட பிராமணர்களிற் சிலர் இந்த அதிகாரிகளைச் சந்தோஷப் படுத்தி அவர்களுடைய தயவால் தங்களுக்கும் தங்க ளுடைய பந்து மித்திரர்களுக்கும் நல்ல நல்ல உத்தி யோகங்களைத் தேடிக்கொண்டார்கள் என்றும், அதே காரியத்தை இப்போது பிராமணரல்லாதாரில் சில படித் தவர்களும் செய்ய விரும்புகின்றார்களென்றும், ஆனால் முன்னாலேயே அங்குள்ள பிராமணர்கள் அதற்கு முட்டுக் கட்டையாக இருக்கிறார்கள் என்பதையும் தவிர இந்த "பிராமண சூழ்ச்சி" என்ற பேச்சுக்கு வேறு அர்த்தம் இருக்கவே முடியாது.

பிராமணர்களோ பிராமண ரல்லாதாரர்களோ இப்படி சர்க்கார் உத்தியோகத்தையே தேடித் திரியவேண் டியவர்களாகிவிட்ட கலாசாலைப் படிப்புள்ளவர்கள், இந்த நாட்டின் ஜனத்தொகையில் மிகமிக சொற்பமானவர்கள். உத்தியோகங்களின் எண்ணிக்கையும் அதைவிடச் சொற்பம். வைசிராய் பதவி முதற்கொண்டு கிராமத் தோட்டிவேலை வரையிலும் இப்போது இந்த சர்க்கா ரிடத்தில் சம்பளம் வாங்குகின்றவர்களுடைய எண்ணிக்கை சுமார் ஐந்து லட்சத்தில் அடங்கிவிடும். அதுவே அதிகம். முப்பத்தைந்தரை கோடி மக்களிருக்கும் இந்த நாட்டில் இந்த ஐந்து லட்சம் போக மீதி முப்பத்தைந்து கோடியே நாற்பத்தைந்து லட்சம் உத்தியோகங்களும் பிராமண ரல்லாதாருக்கே வந்துவிடுவதாக வைத்துக்கொள்வோம்.

அதனால் மீதியுள்ள பிராமண ரல்லாதாருக்கு என்ன நன்மை ஏற்பட்டுவிட முடியும்? பிராமண ரல்லாதவர்கள் எல்லா உத்தியோகங்களிலும் இருந்தால், பிராமண ரல்லாத பெருமக்களுக்கு அதிக நன்மைகளைச் செய்துவிட முடியுமென்று எண்ணவாவது இடமிருக்கின்றதா என்று எண்ணிப் பாருங்கள். நிலவரிச் சுமையைத் தாங்க மாட்டாமல் தவிக்கின்றவர்கள் பிராமண ரல்லாதாரே. கள்ளுக்கடைகளால் கஷ்ட நஷ்ட மடைகின்றவர்கள் பிராமண ரல்லாதாரே. வியாபாரம் கெட்டுப்போய் விழிக் கின்றவர்களும் பிராமண ரல்லாதாரே. கைத்தொழிலுக்கு விலையில்லாமல் கண்ணீரும் கம்பலையுமாகக் குஞ்சு குழந்தைகளையும் கால்நடையாகக் கூட்டிக்கொண்டு, குடும்பம் குடும்பமாக கண்டிக்குப்போகும் கைத்தறிக் காரர்களெல்லாம் பிராமண ரல்லாதவர்களே? பிராமண ரல்லாத உத்தியோகஸ்தர்கள் எவ்வளவு நல்லெண்ண முடையவர்களாக இருந்தாலும் நிலவரியைக் குறைத்து விட முடியுமா? கைத்தொழில்களை ஆதரிக்கும் கட்டாயச் சட்டங்களைச் செய்ய முடியுமா? வியாபார விருத்திக்கான முறைகளை விதிக்கமுடியுமா? கார்டு, கவர், தந்தி, தபால் களின் தலைகளையாவது சரசமாக்க முடியுமா? அரண் மனைப்பணத்தைத் தோட்டி சுமப்பதுபோல, அன்னியர்கள் நம்முடைய கஷ்ட நிஷ்டூரங்களை உணராமல் செய்திருக்கிற சட்டங்களை அவர்களுக்குப் பதிலாக அவர்களுடைய அதிகாரத்துக்கு அடங்கி ஒடுங்கி அமுல் நடத்துகின்ற வர்கள் பிராமணரா யிருந்தாலென்ன; பிராமண ரல்லா தவரா இருந்தாலென்ன?

ஆதலால் 'சூழ்ச்சி' என்ற இந்த கூக்குரல் எல்லாம் இந்த அரசாங்க உத்தியோகங்களுக்காகத்தான் சுற்றிச் சுற்றிச் சுழன்றுகொண் டிருக்க முடியும் என்பது தெளி வாகின்றது. அன்றியும் இந்த நாட்டில் இப்போது

இருந்துவரும் ஆட்சி முறையில்தான் அரசாங்க உத்தியோகங்களுக்கு இவ்வளவு மோகமும் சண்டை சச்சரவுகளும் இருக்கின்றன. வேறு எந்த நாட்டிலும் இல்லை. சரித்திரத்திலும் படித்ததில்லை. கட்டுக்கதைகளிலும் காணோம். எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் பெரும்பாலும் குடிகளுடைய க்ஷேமம்—அரசாங்க உத்தியோகஸ்தர்களுடைய ஜாதி, மதம், நல்லவர், கெட்டவர் என்ற வேறுபாடுகளை பொறுத்தது அல்ல. ஆனால் அந்த அரசாங்க சட்டங்களின் குணகுணங்களையே பொறுத்து நிற்கும்.

இந்தச் "சூழ்ச்சிகளும்" கூட—அவற்றைப் பிராமண சூழ்ச்சிகளாகவே வைத்துக் கொண்டாலும் — இந்த அரசாங்கத்தின் அமைப்பு இப்படியே இருக்கிற வரையிலும் இருந்து கொண்டேதான் இருக்கும். அந்த அமைப்பை மாற்ற வேண்டுமென்பதே காங்கிரசின் முக்கிய நோக்கம். அமைப்பு மாறினால் சூழ்ச்சியும் அழிந்துபோகும்.

இந்த அமைப்பை மாற்ற வேண்டுமென்று பிராமணரல்லாத காந்தியடிகள் நடத்திய சத்தியாக்ரகத்திலும் பார்ப்பன சமூகம் தன்னுடைய சக்திக்கும் எண்ணிக்கைக்கும் அதிகமாகவே ஆதரவளித் திருக்கின்றது. இந்த நாட்டின் ஜனத் தொகையில் நூற்றுக்கு $2\frac{3}{4}$ பேர் தான் பார்ப்பனர்கள். ஆனால் காந்தியாரின் சாத்வீகப் போரில் கலந்து தேச பக்திக்காகச் சிறை சென்றவர்களையும், அடிபட்டவர்களையும் அபராதம் கொடுத்தவர்களையும் கணக்கெடுத்தால் அதில் பார்ப்பனர்கள் நூற்றுக்கு முப்பதுக்கு மேல் இருக்கிறார்கள்.

தீண்டாதாரைத் தீண்டிய தீவிரத்திலும் பிராமணரல்லாதாரைக் காட்டிலும் பிராமணர்களே அதிகமானவர்கள் என்பது என்னுடைய கண்கண்ட உண்மை. இந்தத் தீண்டாமையைத் தொலைக்க பிராமணர்கள்

என்ன செய்து விட்டார்கள் என்ற கேள்விக்கு எங்கள் சேலம் ஸ்ரீ C. அனந்தாச்சாரியார் ஒருவர் செய்திருக்கும் சேவைகளே போதிய பதிலாகும். பிராமணர்கள் அப்படிச் செய்ததும்கூட ஒரு சூழ்ச்சியை எண்ணியே என்றும் ஏளனம் பேசுகின்றவர்கள் சொல்லுகின்றார்கள். அப்படிப் பேசுகின்றவர்களுக்கு சமாதானம் சொல்ல என்னுடைய அகராதியில் எழுத்துமில்லை, சொல்லும் இல்லை.

## "பிராமணரல்லாதார்" என்றால் யார்?

இந்தக் கேள்வியை பிராமணரல்லாதவர்கள் பாரபட்சமில்லாமல் நிதானமாக கவனிக்கும்படி மிகவும் வேண்டிக் கொள்கிறேன். ஏதோ பிராமணர்கள் எல்லாரும் ஒரே முடிப்பு போலவும், பிராமணர்களை நீக்கிய மற்ற எல்லா மனிதர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் போலவும் வெகு இலேசாகப் பேசப்பட்டு வருகின்றது. உண்மைக்கு இது எவ்வளவு மாறான விஷயம் என்பது சிறிது சிந்தனை செய்தால் தெரிந்துவிடும். பிராமணரல்லாதார் எல்லாரும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று அர்த்தமா? ஒரே மதத்தையாவது சேர்ந்தவர்களா? ஒரே நிறமா? ஒரே பாஷையா? ஒரே விதமான சடங்குகள் ஏதேனும் உள்ளவர்களா? கோயில் குளம், குலதெய்வம், என்ற எதிலாவது ஒரே கொள்கையுடையவர்களா? கொள்வது, கொடுப்பது, உண்பது தின்பது, இவற்றில் ஏதேனும் ஒன்றானவர்கள் என்பது பொருளா?—பிராமணர்கள் எல்லாரையும் ஒரே சமூகமென்று சொன்னாலும் ஒருவேளை சொல்லலாம்; அதுவும் உண்மையில் சரியல்ல; ஆனால் பிராமணரல்லாதார் என்ற சமூகம் எங்கே யிருக்கிறது? பிராமணர்களுக்கெல்லாம் பொதுவானவை என்று சொல்ல இரண்டொரு

விஷயங்களாவது இருக்கின்றன. ஆனால் பிராமணரல்லாதாருக்கெல்லாம் பொதுவானது என்று சொல்ல ஒன்றுமில்லை. உதாரணமாக, பிராமணர்களில் எல்லா வகுப்பாரும் நான்கு வேதங்களையும் நம்புகிறார்கள். பிராமணர்கள் எல்லாரும் பூணூல் போட்டுக் கொள்ளுகின்றார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் எல்லா பிராம்மணர்களும் மது மாமிசத்தை விலக்கி யிருக்கிறார்கள். மேலும் கலியாணம் முதலிய காலங்களில் எல்லா பிராமணர்களுக்கும் பொதுவான பல சடங்குகளும் மந்திரங்களும் இருக்கின்றன. இப்படி எல்லாருக்கும் பொதுவானது என்று சொல்லிக்கொள்ள பிராமணரல்லாதாருக்கு என்ன இருக்கிறது? நீங்களே நினைத்துப் பாருங்கள். மறுபடியும் உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன்: இந்த பிராமணரல்லாதார் என்ற சொல் கற்பனையேனும், ஒரு முகூர்த்த காலத்திற்காவது எங்கேயிருக்க முடியுமென்றால்: சர்க்கார் உத்தியோகத்திலும் அதைச் சார்ந்த இடங்களிலும் ஆங்கிலம் படித்த பிராமணர்களோடு மற்றவர்கள் பிணங்கிக்கொள்ளும் சமயங்களில் தான் சிறிதேனும் சாத்தியமாகும். மற்றப்படி நாட்டின் சமுதாய வாழ்வில் "பிராமணரல்லாதார்" என்ற ஒரு சமூகம் இல்லவும் இல்லை, இருக்கவும் முடியாது. இருக்கவே முடியாத ஒன்றை இருப்பதாக மயங்கி, அதற்காக கட்சி கட்டிக் கசப்பான பேச்சுகளுக்கும் கடுமையான மனஸ்தாபங்களுக்கும் இடங்கொடுக்க வேண்டாமென்று பார்ப்பனரல்லாத அனைவரையும் அஞ்சலித்துக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.



நாமக்கல் கவி

ஒப்பற்ற கா

அவளும் அ

படித்தீர்க

விலை ரூ.